# சேவை விலங்கு கொள்கை: நீங்கள் என்ன தெரிந்துகொள்ள வேண்டும்

சேவை விலங்குகளுடன் வரும் பயணிகளை அழைத்துச் செல்வது என்று வரும்போது, தளத்தில் உள்ள ஓட்டுநர்கள் ஒரு விஷயத்தை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்: எப்போதும் ஆம் என்று சொல்லுங்கள்.சேவை விலங்குகளுக்கு ஒவ்வாமை, மத அல்லது கலாச்சார ரீதியான ஆட்சேபனைகள், அல்லது அவற்றைப் பற்றிய பயம் ஆகியவை உங்களுக்கு இருந்தாலும் கூட சட்டரீதியாகவும், **Lyft** கொள்கையின் படியும் நீங்கள் எப்போதும் சேவை விலங்குகளுக்கு இடமளிக்க வேண்டும்.

சேவை விலங்குகள் குறித்து Lyft ஓட்டுநர்கள் சில கேள்விகளை எழுப்பக்கூடும் என்பதை நாங்கள் அறிந்துள்ளோம், ஆனால் பலருக்கு அது அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது. உங்களைப் போன்ற Lyft ஓட்டுநர்கள் பயணிகள் தங்கள் சமூகத்தில் சிரமமின்றி சென்றுவர உதவக்கூடிய தனித்துவமான நிலையில் இருக்கிறார்கள் - இதைத் தீவிரமாக எடுத்துக்கொண்டதற்கும் உங்கள் சவாரிகள் மக்களுக்குத் தேவைப்படும்போது நீங்கள் அங்கு இருப்பதற்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

ஓட்டுநர்களுக்கான அடிக்கடி கேட்கும் கேள்விகள் **(FAQ)**

சேவை விலங்கு என்றால் என்ன**?**

சேவை விலங்குகள் என்பவை வேலை செய்யும் விலங்குகள் ஆகும், செல்லப் பிராணிகள் அல்ல. சேவை விலங்குகள் இயலாமைகள் கொண்ட தனிநபர்களுக்கு உதவுவதற்கென்றே விரிவான பயிற்சி பெறுகின்றன. அவை கண்பார்வை இல்லாதவர்கள் பயணம் செய்ய உதவுகின்றன, காது கேளாதோருக்கு ஒலிகள் குறித்து எச்சரிக்கின்றன, வலிப்புத்தாக்கத்தால் பாதிக்கப்படும் நபர்களைப் பாதுகாக்கின்றன, மற்றும் இயலாமைகளால் பாதிக்கப்பட்டுள்ள தனிநபர்களுக்கு உதவுவதற்கான வேறு பல பணிகளைச் செய்கின்றன.

சேவை விலங்குகள் அடையாளச் சீட்டு அல்லது உடுப்பு அணிய வேண்டியதில்லை அல்லது அவற்றைப் பதிவு செய்ய வேண்டியதில்லை. சேவை விலங்குகளுடன் பயணிப்பவர்கள் தங்கள் விலங்கு சேவை விலங்கு தான் என்பதற்கான ஆதாரம் எதையும் காட்சிப்படுத்த வேண்டியதில்லை. வேறு விதமாகச் சொன்னால், நாயுடன் பயணிக்கும் ஒரு பயணி அது ஒரு சேவை விலங்கு என்று சொன்னால், ஓட்டுநர் அந்தப் பயணியை பயணத்திற்கு அனுமதிக்க வேண்டும்.

ஒரு சுயாதீன ஒப்பந்ததாரராக, சேவை விலங்குகளுக்கு இடமளிப்பது குறித்து நான் தீர்மானிக்க முடியாதா**?**

நெகிழ்வுத்தன்மையும் சுதந்திரமும் வேண்டும் என விரும்பும் மக்களுக்காக நாங்கள் Lyft-ஐ உருவாக்கினோம், இப்போதும் அதே நிலையைக் கடைபிடித்து வருகிறோம். ஆனால், சுயாதீன ஒப்பந்ததாரர்கள் கூட அந்தச் சட்டத்தைக் கடைபிடிக்க வேண்டும். உதாரணமாக, Lyft-க்காக வாகனம் ஓட்டும்போது நீங்களும் உங்கள் பயணிகளும் சீட்பெல்ட் அணிய வேண்டும் என்பது Lyft கொள்கையாகவும் சட்டமாகவும் விளங்குகிறது. அதேபோல, சேவை விலங்குகளுக்கும் நீங்கள் இடமளிக்க வேண்டும் என்பதும் Lyft கொள்கையாகவும் சட்டமாகவும் விளங்குகிறது.

**சேவை விலங்குடன் வரும் பயணியை ஏற்க மறுப்பதால் ஏற்படும் விளைவுகள் யாவை?**

சேவை விலங்குடன் வரும் ஒரு பயணியை ஓட்டுநர் ஏற்க மறுத்தால், குற்றம் சாட்டப்படும் மறுப்பு தொடர்பான விசாரணையின் போது தவறான மறுப்பு உறுதி செய்யப்பட்டால், ஓட்டுநர் உடனடியாக நிரந்தரச் செயலிழப்பு செய்யப்படுவார்.

**சேவை விலங்கு உண்மையிலேயே ஒரு சேவை விலங்குதானா என்பதை நான் எப்படிச் சொல்ல முடியும்? ஒரு பயணி தனது விலங்கு சேவை விலங்கு என தவறாகத் தெரிவிப்பதாக நான் நினைத்தால் என்ன செய்ய வேண்டும்?**

நல்ல செய்தி என்னவென்றால், சேவை விலங்கு என மோசடியாக கூறும் நிகழ்வுகள் நமது சமூகத்தில் மிகவும் அரிதாகவே நடக்கின்றன. அவ்வாறான நிகழ்வுகளில் பயணிகள் நீக்கப்படுவார்கள். ஆனால் நீங்கள் விரும்பினால், தனது விலங்குகள் சேவை விலங்குகள் தான் எனக் கூறும் பயணிகளிடம் இரண்டு கேள்விகளை நீங்கள் கேட்கலாம்: (1) நீங்கள் மாற்றுத்திறனாளியாக இருப்பதனால் அந்த விலங்கு தேவைப்படுகிறதா? மற்றும் (2) எந்த வேலை அல்லது பணி செய்வதற்காக அந்த விலங்குக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது? கேள்விக்குரிய அந்த விலங்கு ஒரு சேவை விலங்குதான் என்பதை இந்தக் கேள்விகள் வழக்கமாக உங்களுக்கு நிரூபித்துக் காட்டிவிடும்.

ஏற்கனவே கூறியதுபோல, நீங்களே தவறாக எதையாவது ஊகித்துக்கொண்டு செயலிழப்புக்கு உள்ளாக வேண்டாம் என நாங்கள் விரும்புகிறோம். சில பயணிகள் வலிப்புத்தாக்கம் அல்லது இதய நிலைமைகள் போன்ற வெளிப்படையாகத் தெரியாத காரணங்களுக்காக சேவை விலங்குகளைப் பயன்படுத்துகிறார்கள். அனைத்துச் சேவை விலங்குகளும் அடையாளச் சீட்டுகளை அணிவதில்லை, மற்றும் அவை அனைத்து வடிவங்களிலும் அளவுகளிலும் வருகின்றன. இந்தக் காரணங்களுக்காக, சேவை விலங்குகள் என பயணிகளால் தெரிவிக்கப்படும்போது நீங்கள் அந்த விலங்குகளுக்கு இடமளிப்பது சிறந்தது.

இந்தக் கொள்கை பற்றி உங்களுக்கு ஏதாவது கேள்விகள் இருந்தால் அல்லது கொள்கையைத் தவறாகப் பயன்படுத்துவதாக நீங்கள் சந்தேகிக்கும் ஒரு பயணி பற்றி புகார் செய்ய விரும்பினால், சவாரி முடிந்த பிறகு Lyft ஆதரவு மற்றும் சேவை விலங்கு ஹாட்லைனை நீங்கள் தொடர்புகொள்ள வேண்டும்.

**நான் சேவை விலங்கு வைத்துள்ள ஒரு ஓட்டுநர் - என்னென்ன விதிகள் கடைபிடிக்கப்படுகின்றன?**

ஓட்டுநர்கள் அவர்களுடைய சேவை விலங்குகளுடன் சவாரி செய்ய அனுமதிக்கப்பட வேண்டும் என்பது Lyft-இன் கொள்கையாகும். ஆனாலும், இதனால் நீங்கள் அழைத்துச் செல்லும் பயணிகளின் எண்ணிக்கையில் கட்டுப்பாடு விதிக்கப்படலாம், மற்றும் சில பயணிகளுக்கு உங்கள் சேவை விலங்கு காரணமாக அசௌகரியம் அல்லது ஒவ்வாமை ஏற்படலாம். அவ்வாறு இருப்பவர்களின் கோரிக்கையை இரத்து செய்யுமாறு நாங்கள் உங்களைக் கேட்டுக்கொள்கிறோம். சேவை விலங்கு குறித்து முன்கூட்டியே அழைத்து பயணிக்குத் தெரியப்படுத்துமாறு நாங்கள் உங்களைக் கேட்டுக்கொள்கிறோம். அவர்களால் உங்கள் சேவை விலங்குடன் பயணிக்க முடியாவிட்டால், அந்த சவாரியை நீங்கள் இரத்து செய்துவிட வேண்டும். அவர்கள் வேறொரு ஓட்டுநரைத் தேடிக்கொள்வார்கள். முக்கியக் குறிப்பு: கோரிக்கை அருகாமையிலிருந்து வந்திருந்தால், ஓட்டுநர் பயன்முறையிலிருந்து ஒரு

நிமிடத்திற்கு நீங்கள் வெளியேறிவிட்டால் பயணியின் அடுத்த கோரிக்கையை நீங்கள் பெறமாட்டீர்கள்.

சேவை விலங்கு கொள்கை மீறல் குறித்து புகார் செய்ய, 1-844-554-1297-ஐ அழைக்கவும் அல்லது Lyft செயலியில் அல்லது உதவி மையத்தின் வாயிலாக ‘ஆதரவைத் தொடர்புகொள்க’ என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

**Shared Lyft என்றால் என்ன? Shared Lyft-இல் உள்ள என்னுடைய பயணி ஒருவருக்கு சேவை விலங்குக்கு ஒவ்வாமை இருந்தாலோ அல்லது ஆட்சேபம் தெரிவித்தாலோ என்ன செய்வது?**

Shared Lyft கோரும் பயணிகள் தாங்கள் வேறொரு நபருடன் நெருக்கமான சூழலில் சவாரி செய்வதற்கு அதிக சாத்தியமுள்ளது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். சில நேரங்களில், ஒரு எலிவேட்டர், விமானம், அல்லது சிறு அலுவலகத்தில் இருக்கும் நிலைமை போல அவர்கள் சேவை விலங்கினைக் கூட எதிர்கொள்ள வேண்டியிருக்கலாம்.

சேவை விலங்குக்கு ஒரு பயணிக்கு உள்ள ஒவ்வாமைகள் அல்லது ஆட்சேபனைகள் கடுமையானதாக இருந்தால், அந்தப் பயணியை வேறொரு சவாரிக்குச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளலாம். தேவைப்பட்டால், சேவை சாராத விலங்குடன் பயணிக்கும் பயணியின் சவாரியை அபராதம் இன்றி நீங்கள் இரத்து செய்யலாம். ஒரு ஓட்டுநராக உங்களுக்கு எப்போதாவது பிரச்சனை ஏற்பட்டால் - அல்லது உங்கள் கட்டணம் பற்றிய பிரச்சனைகள் இருந்தால் - உதவி மையம் வாயிலாக Lyft-ஐ தொடர்புகொள்ளவும். சவாரிக்குப் பிறகு நாங்கள் உங்களுக்கு அதற்கான வழிகாட்டுதலை வழங்குவோம்.

**ஒரு சேவை விலங்குக்கு Shared Lyft-இல் இடம் இல்லையென்றால் என்ன செய்வது?**

சேவை விலங்குகள் பெரும்பாலும் அவற்றின் உரிமையாளர்களின் காலடியிலேயே அமர்ந்துகொள்ளும், எனவே அவற்றுக்கு நீங்கள் கூடுதல் இருக்கைகள் ஒதுக்க வேண்டியதில்லை. அவற்றுக்கு தனி இருக்கைகள் வேண்டியிருந்தால், அவசியமாகத் தேவைப்படும்போது பிற பயணிகள் அதைப் புரிந்துகொண்டு அவற்றுக்கு இடமளிப்பதை நாங்கள் பார்த்திருக்கிறோம். (குறிப்பு: சேவை விலங்குடன் வரும் ஒருவரிடமிருந்து நீங்கள் கோரிக்கையைப் பெறுகின்ற நேரத்தில் பகிரப்பட்ட Shared Lyft-இல் பயணிகள் முழுமையாக இருப்பது அரிது. மேலும், தொடக்கத்திலேயே சேவை விலங்குடன் நீங்கள் ஒரு சவாரி பெறுவதும் அரிது.)

**சேவை விலங்குகள் அல்லாத விலங்குகளையும் நான் ஏற்றிச்செல்ல வேண்டுமா?**

மேலே தெரிவிக்கப்பட்ட இரண்டு கேள்விகளையும் நீங்கள் கேட்ட பின் அந்த விலங்கு ஒரு சேவை விலங்கு அல்ல என பயணி சொன்னால், சவாரியை இரத்து செய்து ஆதரவு மையத்திற்கு அதைத் தெரிவிப்பதற்கான அதிகாரம் உங்களுக்கு உண்டு - அது உங்கள் இரத்துக் கட்டணத்தில் பாதிப்பை ஏற்படுத்தாது.

அனைத்து விலங்குகளையும் ஏற்றிச் செல்லுமாறு உங்களை நாங்கள் ஊக்குவித்தாலும் கூட, உணர்ச்சி ரீதியான ஆதரவு விலங்குகளுக்கு எங்கள் சேவை விலங்கு கொள்கை அல்லது சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அளிக்கப்பட மாட்டாது, எனவே நீங்கள் அவற்றுக்கு இடமளிக்க வேண்டியதில்லை.

ஒரு சேவை விலங்கை ஏற்றிச் செல்வதற்கான மிகச் சிறந்த வழி என்ன?

பயணிகள் தங்கள் சேவை விலங்குகளை தங்களுடன் அழைத்துவர எல்லா நேரங்களிலும் அனுமதிக்கப்பட வேண்டும் மற்றும் அவர்களுடைய சேவை விலங்குகளை வாகனத்தின் பின்புறத்தில் அல்லது பெட்டியில் வைக்குமாறு கேட்டுக்கொள்ளக் கூடாது. பல சேவை விலங்குகளுக்கு வாகனங்களில் பயணிப்பதற்கு அல்லது பின்பக்க இருக்கையின் அடியில் அமர்வதற்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. சில ஓட்டுநர்கள் இருக்கைகளைப் பாதுகாப்பதற்காக தங்கள் வாகனத்தில் ஒரு துவாலை அல்லது விரிப்பினை எடுத்துவந்து இருக்கைகள் மீது விரிக்க விரும்புகிறார்கள்.

சேவை விலங்கு பிரச்சனை பற்றிப் புகாரளிக்க நான் என்ன செய்ய வேண்டும்?

1-844-554-1297 என்ற எண்ணில் சேவை விலங்கு ஹாட்லைனை அழைக்கவும், நாங்கள் உங்களுக்கு உதவி செய்வோம். எழுத்துப்பூர்வமாக புகாரளிக்க விரும்பும் பயணிகளும் ஓட்டுநர்களும் பிரச்சனை பற்றி Lyft செயலியிலோ அல்லது உதவி மையம் வாயிலாகவோ புகார் செய்யலாம்.

---

## சேவை விலங்கு கொள்கை

Lyft செயலி வாயிலாக ஏற்பாடு செய்யப்பட்ட போக்குவரத்துச் சேவைகளை வழங்கும் ஓட்டுநர்கள் சேவை விலங்கு வைத்திருப்பதனால் பயணிகளுக்கு சவாரி மறுக்கப்படுவது, மற்றும் சேவை விலங்குகளை வைத்துள்ள பயணிகளுக்கு எதிராக வேறு வழிகளில் பாகுபாடு காட்டுவது ஆகியவற்றில் ஈடுபடுவது மாநில மற்றும் மத்திய சட்டங்களால் தடை செய்யப்பட்டுள்ளது. இந்த சட்டப்பூர்வமான கடமையை மீறும் வகையில் பாரபட்சமான நடத்தையில் ஈடுபடும் ஓட்டுநர்களுக்கு Lyft செயலிக்கான அணுகல் மறுக்கப்படும்.

### I. சேவை விலங்கு என்றால் என்ன?

சேவை விலங்கு என்பது ஒரு மாற்றுத் திறனாளிக்காக வேலை செய்வதற்கு அல்லது பணிகளை மேற்கொள்வதற்கு பயிற்சியளிக்கப்பட்ட விலங்கு ஆகும். பல வகையான சேவை விலங்குகள் உள்ளன. பெரும்பாலான சேவை விலங்குகள் நாய்கள் ஆகும். கண் பார்வை இல்லாதவர்களுக்கு பயணம் செய்ய உதவுகின்ற வழிகாட்டி நாய்கள், மற்றும் காது கேளாதவர்களுக்கு தொடர்புடைய ஒலிகள் பற்றி எச்சரிக்கை செய்கின்ற சமிக்ஞை நாய்கள் போன்றவை பொதுவான சேவை விலங்கு வகைகளில் அடங்கும். சேவை விலங்கு அடையாளச் சீட்டு அணிந்திருக்க வேண்டும் என்றோ, பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றோ, அல்லது அது ஒரு சேவை விலங்கு என்பதற்கான ஆதாரம் ஏதாவது காட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்றோ அவசியமில்லை.

### II. ஓட்டுநர்களின் சட்டப்பூர்வமான கடமைகள்

ஒவ்வாமைகள், மத ரீதியான ஆட்சேபனைகள், சேவை விலங்குகள் குறித்த பயம், அல்லது ADA-ஆல் வெளிப்படையாக அங்கீகரிக்கப்படாத வேறு ஏதாவது காரணம் ஆகியவற்றுக்கான விலக்குகள் ஏதும் இல்லாமல் சேவை விலங்குகள் கொண்ட பயணிகளை ஏற்றிச்செல்ல ஓட்டுநர்களுக்கு சட்டப்பூர்வமான கடமைப்பொறுப்பு உள்ளது. சேவை விலங்கு வைத்திருப்பதன் காரணமாக சேவை விலங்குடன் வரும் பயணியை ஏற்றிச்செல்ல ஓட்டுநர்

மறுத்தால், அந்த ஓட்டுநர் சட்டத்தையும், அவர் ஒப்புக்கொண்ட Lyft சேவை விதிமுறைமுறைகளையும் மீறியவர் ஆகிறார்.

பயணியின் விலங்கு ஒரு சேவை விலங்கு என்பதை நிரூபிப்பதற்கான ஆதாரத்தை பயணியிடம் ஓட்டுநர் கேட்கக் கூடாது. பயணியின் விலங்கு ஒரு சேவை விலங்குதானா என்பதை உறுதிசெய்ய இரண்டு கேள்விகளை மட்டும் கேட்கலாம் என சட்டம் அனுமதிக்கிறது: (1) உங்கள் இயலாமை காரணமாக அந்த விலங்கு தேவைப்படுகிறதா? மற்றும் (2) எந்த வேலை அல்லது பணி செய்வதற்காக அந்த விலங்குக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது?

## III. சேவை விலங்குடன் வரும் பயணிகளை ஏற்றிச்செல்ல சட்டவிரோதமாக மறுக்கும் ஓட்டுநர்கள் எதிர்கொள்ளும் விளைவுகள்

சேவை விலங்கு வைத்திருப்பதன் காரணமாக சேவை விலங்குடன் வரும் பயணியை ஏற்றிச்செல்ல ஓட்டுநர் வேண்டுமென்றே மறுத்தார் என Lyft கருதினால், அந்த ஓட்டுநர் Lyft தளத்திலிருந்து நிரந்தரமாக நீக்கப்படுவார் மற்றும் Lyft தளம் வாயிலாக ஏற்பாடு செய்யப்படும் போக்குவரத்தை வழங்குவதற்கு அவருக்கு தடை விதிக்கப்படும்.

ஓட்டுநர் (a) சேவை விலங்கு இருப்பதன் காரணமாக சேவை விலங்குடன் வரும் பயணியை ஏற்றிச்செல்ல மறுத்திருந்தால், அல்லது (b) சேவை விலங்கு வைத்திருப்பதன் காரணமாக பயணியை அல்லது பயணியுடன் வந்த வேறொரு நபரை அச்சுறுத்தியிருந்தால், தொல்லை கொடுத்திருந்தால், ஏளனம் செய்திருந்தால், தரக்குறைவான சேவை வழங்கியிருந்தால், அல்லது விரோத மனப்பான்மையுடன் நடந்துகொண்டால், இது போன்ற சம்பவங்கள் பற்றி ஒன்றுக்கு மேற்பட்ட நம்பத்தகுந்த சேவை விலங்கு புகார்களை Lyft பெற்றிருந்தால், அந்த ஓட்டுநர் Lyft தளத்திலிருந்து நிரந்தரமாக நீக்கப்படுவார்.

## IV. சேவை விலங்கு பிரச்சனைகள் பற்றி புகாரளித்தல்

பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் மறுக்கப்படுதல், தொல்லை கொடுத்தல், தவறாக நடத்தப்படும் பிற நிகழ்வுகள், அல்லது முறையற்ற துப்புரவுக் கட்டணம் போன்றவை உள்ளிட்ட சேவை விலங்கு தொடர்பான பிரச்சனைகளை Lyft.புகார்கள் சேவையில் எழுத்துப்பூர்வமாக புகார் செய்யலாம் அல்லது சேவை விலங்கு புகார் ஹாட்லைனை **1-844-554-1297** என்ற எண்ணில் அழைத்துப் புகார் செய்யலாம். Lyft செயலி வாயிலாக எழுத்துப்பூர்வமாக புகாரளிக்க: முதன்மை மெனுவின் கீழ் உள்ள ”ஹெல்ப்” (”Help”) என்பதை கிளிக் செய்யவும்; ”சர்வீஸ் அனிமல்” (”Service Animal”) இணைப்பின் மீது கிளிக் செய்யவும்; “சேவை விலங்கு பிரச்சனை பற்றி புகாரளிக்கவும்” (“report a service animal issue”) பட்டனை கிளிக் செய்யவும். புகார் படிவத்துக்கான இணைப்பு சேவை விலங்கு பக்கத்தில் வழங்கப்பட்டுள்ளது https://help.lyft.com/hc/en-us/articles/214589657-Service-Animal-Policy அல்லது https://help.lyft.com/hc/en-us/requests/new-இல் உள்ள பொது புகார் படிவத்தின் வாயிலாகவும் புகாரளிக்கலாம்.

சேவை விலங்கு புகார்கள் குறித்து Lyft விசாரணை செய்து Lyft-இன் சேவை விதிமுறைகள் மற்றும் இந்தச் சேவை விலங்கு கொள்கை ஆகியவற்றுக்கு இணங்க பொருத்தமான நடவடிக்கை எடுக்கும். விசாரணையின் முடிவு பற்றியும், புகாருக்கு தீர்வு காண Lyft எடுத்துள்ள அல்லது எடுக்கவிருக்கின்ற நடவடிக்கைகள் பற்றியும் புகாரளிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் பயணிக்கு Lyft தகவல் தெரிவிக்கும்.

## V. சேவை விலங்குடன் வரும் பயணிகளுக்கான உரிமைகள்

சேவை விலங்குடன் வருகிறார் என்பதற்காக ஒரு பயணிக்கு சேவைக்கான அனுமதி மறுக்கப்படக் கூடாது. சேவை விலங்கு காரணமாக ஒரு ஓட்டுநர் ஒரு பயணிக்கு சேவை வழங்க மறுத்தால் அந்தப் பயணிக்கு மறுக்கப்பட்ட சவாரிக்கான கட்டணம் அல்லது அவர் மீது விதிக்கப்பட்ட பிற கட்டணங்களுக்கான தொகை திருப்பி அளிக்கப்படும்.

சேவை விலங்கின் அடிப்படையிலான பாகுபாடு குறித்த புகார் தொடர்பாக Lyft என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதைப் பற்றி Lyft மூலம் பயணிகளுக்கு தகவல் தெரிவிக்கப்படும், சம்பந்தப்பட்ட ஓட்டுநருடனான வணிக உறவை Lyft துண்டித்துக்கொண்டதா என்ற தகவலும் இதில் அடங்கும்.

ஐக்கிய அமெரிக்காவில் Lyft தளத்தில் ஓட்டுநரின் பாகுபாடான நடத்தை தொடர்பாக நியாயமெனத் தோன்றுகின்ற சேவை விலங்கு புகார் தெரிவிக்கின்ற ஒவ்வொரு பயணிக்கும் Lyft தளத்தில் பயன்படுத்துவதற்காக அவரது கணக்கில் $5-க்குக் குறையாத தொகை வரவு வைக்கப்படுகிறது.

## VI. துப்புரவுக் கட்டணம்

பயணிகளின் சேவை விலங்குகளால் ஏற்படும் அசுத்தங்களைச் சுத்தம் செய்வதற்காக துப்புரவுக் கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது. பயணிகளின் சேவை விலங்குகளால் ஏற்படும் அசுத்தங்களைச் சுத்தம் செய்ய துப்புரவுக் கட்டணம் விதிக்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு அது திரும்ப வழங்கப்படும்.

பயணியின் தரப்பைச் சார்ந்த ஒரு சேவை விலங்கு ஓட்டுநரின் வாகனத்தில் சிறுநீர், மலம் கழித்திருப்பதை அல்லது வாந்தி எடுத்திருப்பதைக் காட்டுகின்ற புகைப்பட ஆதாரத்தை கட்டாயப்படுத்தி வழங்கினால் பயணிக்கு துப்புரவுக் கட்டணம் விதிக்கப்படலாம். அந்த அளவுக்கு குழப்பம் ஏற்பட்டதாக பயணி வாதிடலாம். துப்புரவுக் கட்டணத்திற்கு எதிராக பயணி வாதிட்டால், Lyft அந்த சச்சரவை மதிப்பீடு செய்து துப்புரவுக் கட்டணம் திருப்பி வழங்கப்பட வேண்டுமா என்பது குறித்து இரண்டு வாரங்களுக்குள் தீர்மானிக்கும். பயணியால் கோரப்பட்டால் தனது முடிவு குறித்து Lyft எழுத்துப்பூர்வ விளக்கம் அளிக்கும்.